# அருப்புக்கோட்டை: கிராம சபை கூட்டத்தில் பரபரப்பு



**விருதுநகர், மார்ச் 30-**

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அருகே பாலவநத்தம் கிராமத்தில் 100 நாள் வேலை திட்டத்திற்கு பணம் வழங்காத மத்திய பா.ஜ.க. அரசை கண்டித்து வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வருவாய் துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க.வினர் ஏராளமானோர் கலந்து கொண்டு மத்திய பாஜக அரசு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பினர். அப்போது இந்த ஆர்ப்பாட்டம் முடியும் நேரத்தில் பாலவநத்தம் கிராமத்தைச் சேர்ந்த பாஜகவை சேர்ந்த மீனா என்ற பெண் இன்று விருதுநகர் மாவட்டத்தில் உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

ஆனால் கிராம சபை கூட்டத்தில் நீங்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவது எதற்காக அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார். அதனைத் தொடர்ந்து அமைச்சர் 11 மணிக்கு கிராம சபை கூட்டம் நடைபெறும் எனக் கூறி அங்கிருந்து சென்றார். அப்போது அங்கு இருந்த பா.ஜ.க. வடக்கு ஒன்றிய தலைவர் நாகராஜன் 100 நாள் வேலை திட்டத்தில் 35 கோடி ஊழல் நடைபெற்றுள்ளது என ஆர்ப்பாட்டத்தின் போது கோஷம் எழுப்பியதால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது. அங்கிருந்த போலீசார் அவர்களை சமாதானப்படுத்தி அவர்களை கலைந்து போகச் செய்தனர். ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சுப்பாராஜ், தி.மு.க. ஒன்றிய செயலாளர் பொன்ராஜ் மற்றும் வடக்கு ஒன்றிய தி.மு.க நிர்வாகிகள் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



**திண்டுக்கல் நத்தம் ரோடு குள்ளனம்பட்டி பகுதியில் 16 வேக தடுப்பு இரும்பு பலகை நிறுவும் நிகழ்ச்சி அப்பகுதியைச் சேர்ந்த மாமன்ற உறுப்பினர் பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. உடன் ஜே.எஸ். டபிள்யு சிவபாலாஜி ஸ்டீல் கம்பெனி உரிமையாளர் சிவபாலாஜி, நகர் வடக்கு ஆய்வாளர் வெங்கடாஜலபதி, நிர்வாகிகள் சதீஷ்குமார், வீரைய்யா, கண்ணன், பிரபாகரன், வீரச்சாமி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.**

# முதுகுளத்தூரில் த.மு.மு.க சார்பில் நலத்திட்ட உதவி



**முதுகுளத்தூர், மார்ச் 30-**

ராமநாதபுரம் தெற்கு மாவட்டம் முதுகுளத்தூர் நகர தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாவட்டத் தலைவர் எம்.வாவா ராவுத்தர் தலைமையிலும் நகரத் தலைவர் எம்.முகைதீன் அப்துல்காதர் முன்னிலையிலும் ரமலான் பெருநாளை முன்னிட்டு ஏழை மக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கும் விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பெரிய பள்ளிவாசல் ஜமாத் தலைவர் .எம்.எம்.கே.எம்.காதர் முகைதீன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பொதுமக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கினார்.

மேலும் இந்த நிகழ்வில் மமக நகர செயலாளர் முகமது காசிம் (மோதி) மற்றும் மமக மாவட்ட துணை செயலாளர் சகாபுதீன், மாவட்ட அணி நிர்வாகிகள் முகமது யாக்கூப், முகமது யூசுப், சகுபர் சாதிக், தமிமுல் அன்சாரி, ராஜா, முகம்மது இபுறாகிம் மிஸ்பாகி,தமிம் அகமது, மற்றும் நகர துணைச் செயலாளர்கள் சீனி முஹம்மது, முகமது ஆரிப்,அசன்தீன் சாகுல் ஹமீது,எஸ்.எம்.ஐ. நிர்வாகிகள் குல்பம் ஈசா, ஜமான் பாட்சா, முகம்மது இபுறாகிம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மேலும் இந்நிகழ்ச்சியில் பூலாங்கால், கீழச்சிறுபோது, மேலச்சிறுபோது, பூக்குளம், கடலாடி, அனி குருந்தன், பேரையூர், ஆனையூர், உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 250-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன் அடைந்தனர்.

# அருப்புக்கோட்டை எஸ்.பி.கே. தொடக்கப்பள்ளி மாணவர்கள் பிரிவு உபச்சார விழா



**அருப்புக்கோட்டை, மார்ச் 30-**

அருப்புக்கோட்டை எஸ்.பி.கே. தொடக்கப்பள்ளியில் பிரிவு உபச்சார விழாவில் மாணவ மாணவிகளுக்கு நாடார்கள் உறவின்முறை தலைவர் சுதாகர் மரக்கன்றுகள் இனிப்பு வழங்கி அனுப்பி வைத்தார். அருப்புக்கோட்டை நாடார்கள் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட எஸ்.பி.கே. தொடக்கப் பள்ளி உள்ளது. இங்கு 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஐந்தாம் வகுப்பு படித்து முடித்துள்ளனர். இவர்களுக்கு பிரிவு உபச்சார விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. விழாவில் அருப்புக்கோட்டை நாடார்கள் உரையின் முறை தலைவர் சுதாகர் பள்ளி படிப்பை முடித்த மாணவ மாணவிகளுக்கு மரக்கன்றுகளையும் இனிப்புகளையும் வழங்கி வழி அனுப்பி வைத்தார்.

முன்னதாக நிகழ்ச்சியில் பள்ளி செயலாளர் சௌந்தரபாண்டியன் முன்னிலை வகித்தார். பள்ளி தலைவர் செந்தில் முருகன் வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் அருப்புக்கோட்டை நாடார்கள் உறவின் முறை, பள்ளி, கல்லூரி நிர்வாகிகள், எஸ் பி கே துவக்கப்பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். நிறைவாக எஸ்.பி. கே. துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியை ரெங்காதேவி நன்றி கூறினார்.

# திருமலைக்கேணியில் அமாவாசை விழா

**நத்தம், மார்ச் 30-**

திருமலைக்கேணியில் அமாவாசை விழா நடைபெற்றது. திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணி சுப்பிரமணியசுவாமி கோவிலில் பங்குனி மாத அமாவாசை விழா நடந்தது.

இதையொட்டி முருகபெருமானுக்கு பால், பழம், பன்னீர், இளநீர், விபூதி, சந்தனம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேககங்களும், அலங்காரம், தீபாராதனைகள் நடந்தது.ராஜாங்க திருக்கோலத்தில் முருகன் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். தொடர்ந்து மாலையில் சுவாமி புறப்பாடு நடந்தது. மேலும் அருகில் உள்ள காமாட்சி மவுன குருசாமி மடத்திலும் அமாவாசையை யொட்டி சிறப்பு பூஜைகள் நடந்தது.பின்னர் பக்தர்களுக்கு அறுசுவை உணவு அன்னதானம் வழங்கப்பட்டது.இதையொட்டி சுற்றுவட்டாரங்களிலிருந்தும் வெளிமாவட்டங்களிலிருந்தும் ஏராளமான முருகபக்தர்கள் கலந்து கொண்டு நெய்விளக்கேற்றி சுவாமி தரிசனம் செய்தனர்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் பெரிய மாரியம்மன் கோவில் பூக்குழி திருவிழா கோலாகலம்

## ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு



**விருதுநகர், மார்ச் 30-**

ஸ்ரீவில்லிபுத்தூரில் பெற்ற பெரிய மாரியம்மன் கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி மாத பூக்குழி திருவிழா சிறப்பாக நடைபெறும்.இதில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் விரதம் இருந்து பூக்குழி இறங்குவது வழக்கம். இந்த ஆண்டு பெரிய மாரியம்மன் கோயிலில் பூக்குழி திருவிழா கடந்த 18ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கி சிறப்பாக நடைபெற்று வருகிறது. முக்கிய நிகழ்ச்சியாக பக்தர்கள் பூக்குழி இறங்கும் விழா நேற்று 29ஆம் தேதி நடைபெற்றது. முன்னதாக அதிகாலை 4:30 மணிக்கு பெரிய மாரியம்மன் க்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

இதனைத் தொடர்ந்து கோயில் முன்பு அமைக்கப்பட்டுள்ள யாக குண்டத்தில் தீ வளர்க்கப்பட்டு பூக்குழியில் ஆண் பெண் பக்தர்கள் பக்தி பரவசத்துடன் பூக்குழி இறங்கினர். ஏராளமான பக்தர்கள் தீச்சட்டி ஏந்தியும் குழந்தைகளை சுமந்தும் பூக்குழி இறங்கினர். சுமார் 15,000 திற்கும் மேற்பட்ட பக்தர்கள் பூக்குழி இறங்கியது குறிப்பிடத்தக்கது. விழாவில் சாத்தூர் இருக்கன்குடி அறநிலைத்துறை உதவி ஆணையர் இளங்கோவன் கோயில் தக்கார் செள.சர்க்கரை அம்மாள் கோயில் செயல் அலுவலர் ஜோதிலட்சுமி செயல் அலுவலர்கள் லட்சுமணன் தேவி முத்து மணிகண்டன் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட எஸ்பி கண்ணன் உத்தரவின்படி ஏ டி எஸ் பிகள் சூரியமூர்த்தி அசோகன் ஆகியோர் மேற்பார்வையில் ஸ்ரீவில்லிபுத்தூர் டிஎஸ்பி ராஜா தலைமையில் 500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர் . பூக்குழியை தொடர்ந்து இன்று 30 ஆம் தேதி காலை பெரிய மாரியம்மன் திருத்தேரோட்டம் நடைபெறுகிறது. பெரிய மாரியம்மன் கோவில் பூக்குழி திருவிழா ஏற்பாடுகளை மதுரை அறநிலையத்துறை இணை ஆணையர் க.செல்லதுரை விருதுநகர் உதவியாளர் நாகராஜன் தக்கார் செள.சக்கரை அம்மாள் ஆய்வாளர் முத்து மணிகண்டன் கோயில் செயல் அலுவலர் ஜோதிலட்சுமி மற்றும் கோவில் அலுவலர்களும் திருக்கோயில் பணியாளர்களும் செய்து இருந்தனர்.

# கேம்ப் ஜீப் சென்னை ஒரு வீக்எண்ட் அட்ரினலின்-பம்பிங் ஆஃப்-ரோடு ஆக்ஷன்

**சென்னை, மார்ச் 30-**

நாம் அனைவரும் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த கேம்ப் ஜீப் சென்னை நிகழ்ச்சியை 22 மற்றும் 23 மார்ச் 2025 தேதிகளில் செம்மஞ்சேரியில் உள்ள தி ஃபார்ம் என்ற இடத்தில் நடத்தி ஜீப் இந்தியா நிறுவனம் ஒரு அல்டிமேட் ஆஃப்-ரோடு எக்ஸ்பீரியன்ஸை சென்னை மக்களுக்கு வெற்றிகரமாக வழங்கியது. எல்லைகளை மீறி ஓட்டிச் செல்வது, ஜீப்பின் புகழ்பெற்ற மடல்களில் அமர்ந்து சவாலான நிலப்பரப்புகளை வெல்வது என ஜீப் ஆர்வலர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் சாகச விரும்பிகள் என இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவரும் ஒரு புதுவிதமான அனுபவத்தைப் பெற்றனர்.

இந்த கேம்ப் ஜீப் சென்னை நிகழ்ச்சியில் சான்றளிக்கப்பட்ட ஜீப் ஜம்போரி டிரெயினர்களின் மேற்பார்வையில் ரேங்லர், மெரிடியன், கிராண்ட் செரோகி மற்றும் கம்பாஸ் ஆகிய பிரபலமான ஜீப்களை சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஆஃப்-ரோடு பாதையில் ஓட்டிச் செல்வதற்கு பங்கேற்பாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். செங்குத்தான சாய்வுகள் , நீர் தடைகள் மற்றும் பாறை பாதைகளில் ஓட்டிச் செல்வது என மிகவும் த்ரிலிங்கான அனுபவங்களை பங்கேற்பாளர்கள் அனுபவித்தனர். இதன் மூலம் ஜீப்பின் ஈடு இணையற்ற திறன்கள் நேரிடையாக நிரூபிக்கப்பட்டன.

# இந்த ஐபிஎல் சீசனில், எம்.எஸ்.தோனியின் மென் ஆஃப் பிளாட்டினம் கலெக்ஷன்கள்

**சென்னை, மார்ச் 30-**

மீண்டும் தல தோனி இந்த ஐபிஎல் சீசனில் மஞ்சள் ஜெர்சியை அணிந்து வந்து நாடு முழுவதும் உள்ள ரசிகர்களிடையே ஆர்வத்தைத் தூண்டும் வேளையில், கிரிக்கெட் காய்ச்சல் உச்சத்தை அடைகிறது. எம்.எஸ். தோனியின் விசுவாசியான ஒவ்வொருவருக்கும், இது வெறும் ஒரு விளையாட்டு மட்டுமல்ல, அதற்க்கும் மேலாக, இது ஒரு நம்பிக்கை, மீள்தன்மை மற்றும் என்றென்றும் வாழும் தருணங்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட ஒரு உடைக்க முடியாத பிணைப்பு. இந்த சீசனில், அந்த ஜாம்பவானுக்கு மரியாதை செலுத்தும் வகையில், விளையாட்டின் சிறந்தவர்களின் பாரம்பரியத்தைப் போலவே நீடிக்கும் ஒரு உலோகமான அரிய பிளாட்டினத்தில் வடிவமைக்கப்பட்ட பிரத்யேக 'மென் ஆஃப் பிளாட்டினம்' x எம்எஸ் தோனி சிக்னேச்சர் கலெக்ஷனை ரசிகர்கள் அனைவரும் பெருமையுடன் அணியுங்கள்.

வெறும் நகைகளை விட, ரசிகர்கள் தங்கள் விசுவாசத்தை அணியவும், அவரது மரபைக் கொண்டாடவும், அவர்கள் எங்கு சென்றாலும் அவரது ஒப்பற்ற உணர்வின் ஒரு பகுதியை எடுத்துச் செல்லவும் இது ஒரு வழியாகும். 95% பிளாட்டினத்தில் வடிவமைக்கப்பட்ட ஒவ்வொரு நகையும், சுத்தமான, தடித்த கோடுகள் மற்றும் குறைந்தபட்ச அழகியலால் வரையறுக்கப்பட்டு, தோனியின் கையொப்பத்தை பிளாட்டினத்தில் பொறித்து அவரது பயணத்தின் சின்னமாகத் தாங்கி நிற்கிறது. அது ஒரு தடித்த வளையலாக இருந்தாலும் சரி, நேர்த்தியான சங்கிலியாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு தனித்துவமான மோதிரமாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு வடிவமைப்பும் அதன் காலத்தால் அழியாத அதிநவீனத்தை மறுவரையறை செய்கிறது.இந்த ஐபிஎல் சீசனில், நீங்கள் எங்கு சென்றாலும் தோனியின் புகழ்பெற்ற உணர்வைக் கொண்டு செல்லும் பிளாட்டினம் நகைகளுடன் உங்கள் விளையாட்டு நாள் தோற்றத்தை முன்னெடுத்துச் செல்லுங்கள்.





**மதுரை மாநகராட்சி மண்டலம் 5, வார்டு 74 பழங்காநத்தம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இறகு பந்து உள்விளையாட்டு அரங்கத்தை அமைச்சர் மூர்த்தி திறந்து வைத்தார். உடன் மேயர் இந்திராணி, ஆணையாளர் சித்ரா, துணைமேயர் நாகராஜன், மண்டலத்தலைவர் கவிதா மற்றும் மாமன்ற உறுப்பினர் சுதன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடன் உள்ளனர்.**

# புல்லமுத்தூர் ஊராட்சி தொடக்கபள்ளியின் 65-வது ஆண்டு விழா



**திருமங்கலம், மார்ச் 30-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் ஒன்றியம் புல்லமுத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் 65 வது பள்ளி ஆண்டு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்ட இவ்விழாவிற்கு திருமங்கலம் வட்டார வளமைய மேற்பார்வையாளர் சரவணன் தலைமை வகித்தார்.

முன்னாள் வட்டாரக் கல்வி அலுவலர் நமசிவாயம்,ஆசிரியர் பயிற்றுநர் பாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

விழாவில் மாணவர்களின் கல்விச் செயல்பாடுகள் கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்று பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது. இதனை தொடர்ந்து போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. பள்ளியின் தலைமை ஆசிரியை கனிமுத்துப் பாப்பா மற்றும் உதவியாசிரியர் வனராஜ் ஆகியோர் இந்த நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.




**தொப்பம்பட்டியில் மத்திய ஒன்றியம் தொப்பம்பட்டியில் மத்திய அரசை கண்டித்து தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் கீரனூர் பேரூர் செயலாளர் அன்பு(எ)காதர் பாட்சா தலைமையிலும், தொப்பம்பட்டி மத்திய ஒன்றிய செயலாளர் பொன்ராஜ் முன்னிலையில் நடைபெற்றது.**

# அருப்புக்கோட்டையில் கிரீன் விஸ்டம் பள்ளியில் சமூக நல்லிணக்க ரமலான் மற்றும் அறிவு திருவிழா



**அருப்புக்கோட்டை, மார்ச் 30-**

அருப்புக்கோட்டை கிரீன் விஸ்டம் மெட்ரிகுலேஷன் பள்ளியில் சமூக நல்லிணக்க ரமலான் மற்றும் அறிவு திருவிழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியை சசிகலா வரவேற்று பேசினார். பள்ளி தாளாளர் ராஜா முகமது சேட் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் ஆயை.மு. காஜாமைதீன், சம்சுதீன் சாதலி, அகமது யாசிர், அகமது ஹபீரா ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் ஓய்வு பெற்ற வணிகவரித்துறை அதிகாரி நெய்னா முகமது சிறப்புரையாற்றினார்.

புனித ரமலான் பற்றிய செய்திகளை இமாம் முஜிபர் ரஹ்மான் பைஜி வழங்கினார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. மீரா மருத்துவமனை சார்பாக அனைத்து மாணவர்களுக்கும் திருக்குறள் புத்தகம் இலவசமாக வழங்கப்பட்டது. விஸ்டம் சொசைட்டி உறுப்பினர் எர்சாத் கான், டி.என்.பி.எஸ். சி. பயிற்சியாளர் யாசர் அராபத் உட்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை ஆசிரியர் ஜாஸ்மின் ஒருங்கிணைத்து பேசினார். நிறைவாக ஆசிரியை அமிர்த லட்சுமி நன்றி கூறினார்.

# சிவகாசியில் வருவாய் ஆய்வாளருக்கு செல்போனில் மிரட்டல் விடுத்த பெண்

**விருதுநகர், மார்ச் 30-**

சிவகாசியில் குடும்ப அட்டை கிடைக்காத ஆத்திரத்தில், வருவாய் ஆய்வாளருக்கு செல்போனில் மிட்டல் விடுத்த பெண்ணின் ஆடியோ வைரலாகியுள்ளது.

சிவகாசி கருப்பணன் தெருவைச் சேர்ந்தவர் சந்திரலேகா. மேற்கு வங்க மாநிலத்தில் பணிபுரிந்த இவர் கணவரைப் பிரிந்து வாழ்ந்து வருகிறார். இவருக்கு, 2 பெண் குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில் அதே தெருவில் உள்ள முகவரியில் குடும்ப அட்டைக்கு இணைய வழியில் விண்ணப் பித்துள்ளார். எனவே, தனி வருவாய் ஆய்வாளர் கோட்டையராஜ் அங்கு நேரில் சென்று விசாரித்துள்ளார். அப்போது, அம்முகவரியில் வேறு குடும்பத்தினர் வசிப்பது தெரிய வந்தது. எனவே, சந்திரலேகாவின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. இதனால், ஆத்திரமடைந்த சந்திரலேகா, தனி வருவாய் ஆய்வாளர் கோட்டையராஜின் செல்போனை தொடர்பு கொண்டார். அவரிடம் தகாத வார்த்தைகளுடன் ஆபாசமாக பேசியும், கொலை மிரட்டலும் விடுத்ததாக கூறப்படுகிறது. இந்த ஆடியோ வெளியாகி தற்போது வைரலானது. இந்நிலையில், இச்சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, சிவகாசி வட்ட வழங்க அலுவலர் கோதண்டராமன், மாவட்ட வழங்கல் அலுவலருக்கு பரிந்துரை செய்துள் ளார்.

### கீழையூரில்

# மாவட்ட காவல்துறை, மாவட்ட நிர்வாகம் இணைந்து நடத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சி

## மாவட்ட கலெக்டர் சங்கீதா பங்கேற்பு



**மேலூர், மார்ச் 30-**

மதுரை மாவட்ட காவல் துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து நடத்திய ஒன்றிணைவோம் விழிப்புணர்வு நிகழ்ச்சி கீழையூர் திருமண மண்டபத்தில் நேற்று நடை பெற்றது.

மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அர்விந்த் ஏற்பாட்டில் ஒன்றிணைவோம் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதா சிறப்பு விருந்தினாரக கலந்து கொண்டார். சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு காவல் சார்பு ஆய்வாளர் கிருஷ்ணபாண்டி வரவேற்புரையாற்றினார். மது, புகையிலை ஒழிப்பு, சாதி, தீண்டாமை ஒழிப்பு பற்றி விழிப்புணர்வு நாடகத்தை கிராம கலைக்குழுவினர் மற்றும் லதா மாதவன் மாணவ மாணவிகள் நாடகத்தை நடத்தி காட்டினர்.

நிகழ்ச்சியில் மதுரை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையகம்) கருணாகரன், மேலூர் வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ராமகிருஷ்ணன், மதுரை உதவி ஆணையர் (கலால்) ராஜகுரு, மேலூர் உட்கோட்டம் காவல் துணைக் கண்காணிப்பாளர் சிவக்குமார், லதா மாதவன் கல்லூரி தாளாளர் டாக்டர் கரு. மாதவன், மேலூர் தாசில்தார் செந்தாமரை, மேலூர் இன்ஸ்பெக்டர் சிவசக்தி, இளைஞர் நீதிக்குழுமம் உறுப்பினர் பாண்டியராஜா, பேர்டு டிரஸ்ட் இயக்குநர் சமூக ஆர்வலர் ராஜ்குமார், வெள்ளலூர் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் அம்பலம் சிவனேஷ், மற்றும் காவல் சார்பு ஆய்வாளர்கள், போக்குவரத்து போலீசார், இளைஞர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் சரவண ரவி நன்றி கூறினார்.

### ராமநாதபுரம் அருகே

# வெள்ளரிஓடை ஊராட்சியில் கிராம சபை கூட்டம் கலெக்டர் தலைமையில் நடந்தது



**ராமநாதபுரம், மார்ச் 30-**

ராமநாதபுரம் அருகே வெள்ளரி ஓடை ஊராட்சியில் கிராம சபை கூட்டம் கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் தலைமையில் நடந்தது.

ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளரி ஓடை ஊராட்சியில் உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் பங்கேற்று ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை பார்வையிட்டார். அப்போது அவர் பேசியதாவது:-

நீர்வளத்தைக் காப்பதும், அதனை பெருக்குவது குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதே உலக தண்ணீர் தினத்தின் நோக்கமாகும். பொதுமக்கள் தண்ணீரை எவ்வாறு சிக்கனமாக பயன்படுத்துவது என்றும் எந்த வகையில் தண்ணீரை பாதுகாக்கப்படுவது என்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இக்கூட்டம் நடைபெற்றது.

தண்ணீர் சிக்கனம் மற்றும் பாதுகாப்பு இவை இரண்டும் பொதுமக்களாகிய ஒவ்வொருவரின் பங்களிப்பில் தான் இருக்கிறது. அந்த அளவிற்கு தண்ணீரின் பயன் மிக மிக இன்றியமையாத ஒன்றாக இருந்து வருகிறது. அதை பாதுகாப்பது என்பது ஒவ்வொருவரின் கடமையாகும். இன்றைய சேமிப்பு வருங்கால சந்ததியினரின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்திடும். இவ்வாறு பேசினார். அவர் மேலும் தெரிவிக்கையில், இது போன்ற கிராம சபைக் கூட்டத்தில் ஊராட்சியின் வளர்ச்சிக்கு தேவையான திட்டங்களை பொதுமக்கள் முன்னிலையில் தேர்வு செய்து செயல்படுத்திட வேண்டும். அதேபோல் அரசு வழங்கும் திட்டங்கள் தகுதிவுடைய அனைத்து பயனாளிகளுக்கும் கிடைக்கும் வகையில் பொதுமக்கள் முன்னிலையில் தேர்வு செய்து திட்டங்களை பெற்றிட வேண்டும். இதுமட்டுமின்றி அரசு பள்ளியில் ஆரம்பக் கல்வி முதல் படித்து வரும் மாணவ, மாணவிகள் உயர்கல்வி பெற புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்துவதுடன், காலை உணவு திட்டம் துவங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. தற்பொழுது மின்சாரத்தை சேமித்திடும் வகையில் ஒவ்வொரு வீட்டின் மேலே சோலார் மின் திட்டம் அமைக்க 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. அந்தத் திட்டத்தை பயன்படுத்தி மின்சார கட்டணங்களை குறைத்துக் கொள்ளலாம். இதேபோல் மக்களை தேடி மருத்துவத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் வழங்கப்படுகிறது. பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு கூறினார்.

இக்கூட்டத்தில் மகளிர் திட்ட அலுவலர் அருண்மொழி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் மோகன் ராஜ், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பத்மநாதன், மண்டபம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெயக்குமார், சோமசுந்தரம் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 / 94**

# டிஜிட்டல் புரட்சிக்கான இன்ஸ்டிடியூட் ஆப் கம்பெனி செக்ரட்டரிஸ் ஆப் இந்தியாவின் முன்முயற்சி திட்டங்கள்

**சென்னை, மார்ச் 30-**

மாணவர்கள் மேம்பாடு மற்றும் டிஜிட்டல் புரட்சிக்கான பல்வேறு புதிய முன்முயற்சி திட்டங்களை இன்ஸ்டிடியூட் ஆப் கம்பெனி செக்ரட்டரிஸ் ஆப் இந்தியா அறிவித்துள்ளது. அந்த வகையில், இதன் 3வது தேசிய மகளிர் மாநாடு வரும் 28 மற்றும் 29-ந்தேதிகளில் இந்தூரில் நடைபெற உள்ளது.

நல்லாட்சி: மூலதன சந்தைகளை மேம்படுத்துதல் என்ற தலைப்பில் ஏப்ரல் 24 முதல் 26 வரை 'மத்திய கிழக்கு மாநாடு 2025 துபாயில் நடைபெறுகிறது. மேலும் புதுமைகளை தழுவி, நல்லாட்சியை மேம்படுத்துதல் என்ற தலைப்பில் ஆஸ்திரேலியாவின் சிட்னியில், வரும் செப்டம்பர் 3 முதல் 5 வரை 4வது சர்வதேச மாநாடு நடைபெற உள்ளது.

இன்ஸ்டிடியூட் ஆப் கம்பெனி செக்ரட்டரிஸ் ஆப் இந்தியா (ஐசிஎஸ்ஐ) என்பது இந்தியாவில் நிறுவன செயலாளர்களின் தொழிலை ஒழுங்குபடுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் நாடாளுமன்றச் சட்டத்தின் கீழ், அதாவது 1980-ம் ஆண்டு நிறுவனச் செயலாளர்கள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு முதன்மையான தொழில்முறை அமைப்பாகும்.

மேலும் இது 74 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களையும் சுமார் 2 லட்சம் மாணவர்களையும் கொண்டுள்ளது. இது குறித்து ஐசிஎஸ்ஐ தலைவர் சிஎஸ் தனஞ்சய் சுக்லா மற்றும் துணைத் தலைவர் சிஎஸ் பவன் ஜி. சந்தக் ஆகியோர் கூறுகையில், ஐசிஎஸ்ஐ தனது நிர்வாக மற்றும் தொழில்முறை திட்ட மாணவர்களுக்கு இலவசமாக பாடம் மற்றும் பாடம் சார்ந்த சந்தேகங்களை நிவர்த்தி செய்ய ஆன்லைன் வகுப்புகளைத் தொடங்க பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிர்வாக காரணிகளை உள்ளடக்கிய பொறுப்பான முதலீட்டிற்கான சிறந்த நடைமுறைகளை கோடிட்டுக் காட்டும் இதன் வழிகாட்டுக் கொள்கைகள், நிறுவன முதலீட்டாளர்கள் மற்றும் சேவை வழங்குனர்களை மேம்படுத்தும் நெறிமுறை மேலாண்மை நடைமுறைகளின் கட்டமைப்பாகும் என்று கூறினார்.

# தான்ஹ் காங் குருப்பும் ஸ்கோடா குஷக், ஸ்லாவியாவை அசெம்பிள் செய்யும் ஆலை வியட்நாமில் திறப்பு

**திருச்சி, மார்ச் 30-**

ஸ்கோடா ஆட்டோவும் பிராந்திய பார்ட்னர் மற்றும் முதலீட்டாளருமான தான்ஹ் காங் குருப்பும் ஸ்கோடா ஸ்லாவியா மற்றும் குஷக் கார்களின் அசெம்பிளிக்காக வியட்நாமில் அதிகாரபூர்வமாக ஒரு புதிய உற்பத்தி ஆலையை மார்ச் 26 அன்று திறந்தன. இது இந்த பிராண்டின் சர்வதேசமயமாக்கலின் உத்தியில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை குறிக்கிறது மற்றும் ஐரோப்பாவையும் கடந்து நிற்கின்ற தனது இருப்பை வலுவாக்கும் குறிக்கோளை வலுப்படுத்துகிறது.

இந்தியாவிலிருந்து குஷக் எஸ்யூவி -ன் கம்ப்ளீட்லி நாக்ட்-டவுன் கிட்சை இறக்குமதி செய்து உள்ளூரிலேயே அசெம்பிள் செய்வதன் மூலம் ஸ்கோடா ஆனது புவிசார் சினர்ஜிகளின் நன்மையை பெறுகிறது. ஸ்லாவியா செடானை சேர்த்துக்கொள்வதற்கு இந்த உற்பத்தி திட்டமானது கோடையில் விரிவடையும் மற்றும் இதுவும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கம்ப்ளீட்லி நாக்ட்-டவுன் கிட்சை கொண்டு அசெம்பிள் செய்யப்படும்.

குவாங் நின் மாகாணத்தில் அமைந்துள்ள இந்த உற்பத்தி வளாகமானது ஒரு வெல்டிங் பட்டறை, பெயின்ட் பட்டறை மற்றும் இறுதி அசெம்பிளி லைன் ஆகியன உள்ளிட்டவாறு நவீன தொழில்நுட்பத்தை கொண்டிருக்கும். வியட்நாம் சந்தையில் தடம் பதித்ததிலிருந்து 15 ஸ்கோடா விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன மற்றும் 2025 க்குள் இந்த வலைத்தொடரானது 32 டீலர்ஷிப்புகளாக விரிவுபடுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

ஸ்கோடா ஆட்டோவின் சிஇஓ க்ளாஸ் ஜெல்மர் கூறுகையில், "இந்த புதிய அசெம்பிளி லைனை திறப்பது என்பது விரைவாக வளர்ந்து வரும் வியட்நாமிய சந்தையில் எங்கள் விரிவாக்கத்தின் ஒரு மைல்கல்லை குறிக்கிறது மற்றும் பிராந்தியமான தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கத்தின் பிராந்தியத்தில் எங்கள் நிலையை வலுவாக்குகிறது. எங்கள் முக்கிய இந்திய சந்தையின் சினர்ஜிகளின் நன்மையை பெறுவதன் மூலம் நாங்கள் ஸ்கோடாவின் மட்டுமல்லாது எங்கள் உள்ளூர் பார்ட்னரான தான்ஹ் காங் குருப்பின் வெற்றிக்கான தளத்தையும் அமைக்கவிருக்கிறோம். விரைவிலேயே நாங்கள் வியட்நாமிய உற்பத்தி ஆலையிலிருந்து வெளிவரும் முதல் வாகனங்களை வாடிக்கையாளர்கள் முன் நிறுத்துவதற்கு ஆவலாக இருக்கிறேன்," என்று விளக்கினார்.

தான்ஹ் காங் குருப் வாரியத்தின் தலைவரான குயேன் ஆன்ஹ் துவான் கூறுகையில், "வியட்நாமில் முதல் ஸ்கோடா உற்பத்தி ஆலை என்பது தான்ஹ் காங் குருப்பால் நன்கு திட்டமிடப்பட்டு முதலீடு செய்யப்பட்ட தான்ஹ் காங் வியட்ஹுங் ஆட்டோமோட்டிவ் மற்றும் துணை வளாகத்தில் மேற்கொள்ளப்படும் முக்கிய ப்ராஜெக்ட் ஆகும் மற்றும் இது ஐரோப்பிய ஆட்டோமோட்டிவ் கூட்டுமுயற்சியை பேணுவதற்கும் உற்பத்தி மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கும் புதிய ஆற்றல் வாகனங்கள் மற்றும் மின்சார வாகனங்கள், பிரத்தியேக மற்றும் தனிப்பயன் டிசைன் வாகனங்கள் ஆகியன உள்ளிட்ட பன்முகப்பட்ட ப்ராடக்டுகளின் ஒரு ரேஞ்சை எதிர்காலத்தில் உற்பத்தி செய்யவும் குறிக்கோள் கொண்டது," என்று விளக்கினார்.

# 50% வளர்ச்சி கவனமீர்க்கும் அமேசான் ப்ரெஷ்

**வேலூர், மார்ச் 30-**

அமேசான் இந்தியா, அதன் முழு அளவிலான மளிகை சேவையான அமேசான் ஃப்ரெஷை நாடு முழுவதும் 170க்கும் மேற்பட்ட பெருநகரங்கள்/சிறு நகரங்களுக்கு குறிப்பிடத்தக்க அளவில் விரிவுபடுத்துவதாக அறிவித்துள்ளது. இந்த விரிவாக்கம், *H2'24* எதிராக *H2'23* இல் அமேசான் ஃப்ரெஷின் *50%* ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியுடன் ஒத்துப்போகிறது, இது *Amazon.in* இல் வேகமாக வளர்ந்து வரும் வகைகளில் ஒன்றாக அதன் நிலையை உறுதிப்படுத்துகிறது. பழங்கள், காய்கறிகள், பால் மற்றும் ரொட்டி உள்ளிட்ட பால் பொருட்கள், உறைந்த பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், குழந்தை பராமரிப்பு அத்தியாவசியப் பொருட்கள், தனிப்பட்ட பராமரிப்புப் பொருட்கள் மற்றும் செல்லப்பிராணிப் பொருட்கள் உள்ளிட்ட ஈரமான மற்றும் உலர்ந்த மளிகைப் பொருட்களின் விரிவான வரம்பை அமேசான் ஃப்ரெஷ் வழங்குகிறது. சிறந்த சேமிப்பு, பரந்த தேர்வு மற்றும் துளையிடப்பட்ட வீட்டு வாசலில் டெலிவரி செய்யும் வசதியுடன் தடையற்ற ஷாப்பிங் அனுபவத்தை வழங்குவதே இந்த சேவையின் நோக்கமாகும்.

அமேசான் ஃப்ரெஷ் இந்தியாவின் இயக்குனர் ஸ்ரீகாந்த் ஸ்ரீ ராம் கூறுகையில், "170க்கும் மேற்பட்ட பெருநகரங்கள்/சிறு நகரங்களுக்கு எங்கள் விரிவாக்கம் அமேசான் ஃப்ரெஷ் இந்தியாவின் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை பெருநகரங்கள்/சிறுநகரங்கள் மற்றும் அதற்கு அப்பால் அதன் வரம்பை விரிவுபடுத்த அனுமதிக்கிறது, நுகர்வோருக்கு போட்டி விலையில் உயர்தர மளிகைப் பொருட்களை அணுகவும், அவர்களின் வீட்டு வாசலில் வசதியாக விநியோகிக்கவும் உதவுகிறது.

கோரக்பூர், சித்தூர், அம்பாலா, விஜயவாடா போன்ற நகரங்களுக்கு அமேசான் ஃப்ரெஷை விரிவுபடுத்துவதன் மூலம், அதிகமான வாடிக்கையாளர்கள் இப்போது அமேசான் ஃப்ரெஷ் விற்பனையாளர்கள் மற்றும் வங்கி கூட்டாளர்களிடமிருந்து சிறந்த சேமிப்புகளையும் அற்புதமான சலுகைகளையும் அனுபவிக்க முடியும், அதே நேரத்தில் அவர்களின் வாராந்திர மற்றும் மாதாந்திர மளிகை பாஸ்கெட்டுகளை உருவாக்க முடியும்.

### ஒட்டன்சத்திரம் பகுதி

# பள்ளிவாசல்களில் லைலத்துல் கத்ர் இரவு சிறப்பு தொழுகை நடந்தது

**ஒட்டன்சத்திரம், மார்ச் 30-**

இஸ்லாமியர்களின் கடமைகளில் ஒன்றான ரம்ஜான் நோன்பு நோற்பது. இந்த ரம்ஜான் கடைசி பத்து நாட்களில் வரும் 27 ஆம் நாளான லைலத்துல் கத்ர் இரவு மிகவும் சிறப்பு வாய்ந்த இரவாகும் லைலத்துல் கத்ர் என்பது ரமழானின் மிகவும் புனிதமான இரவு, இது ஆயிரம் மாதங்களைவிடச் சிறந்தது என்று கருதப்படுவதுடன், அதிக நன்மைகள் மற்றும் பாக்கியங்கள் கிடைக்கும் இரவாகக் கருதப்படுகிறது. லைலத்துல் கத்ர் என்றால் கண்ணியமிக்க இரவு என்று பொருள்.

இந்த இரவில் செய்யப்படும் வணக்கங்கள் ஆயிரம் மாதங்களில் செய்யப்படும் வணக்கங்களைவிடச் சிறந்தது, குர்ஆன் அருளப்பட்ட இரவாகக் கருதப்படுகிறது. கடந்த 3 தினங்களுக்கு முன் இரவு நடைபெற்ற சிறப்பு தொழுகையில் ஒட்டன்சத்திரம் துல்கருணை சிக்கந்தர் நகர்ஜாமிஆ மஸ்ஜித்பள்ளி, மதினா பள்ளி, தர்காபள்ளி, டவுன் பள்ளி, ரஹ்மானியா பள்ளி, வடக்குபள்ளி, மற்றும் சாலைப்புதூர், இடையகோட்டை, கொல்லப்பட்டி, விருப்பாச்சி, மார்க்கம்பட்டி ஜவ்வாதுபட்டி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் லைலத்துல் கத்ர் சிறப்பு தொழுகையில் ஈடுபட்டு இரவு பிரார்த்தனைகள் செய்தனர் மேலும் தங்கள் பகுதி பள்ளிவாசல்களை மின்விளக்குகளால் அலங்காரம் செய்திருந்தனர்.

### நாட்டின மாடுகளை பாதுகாத்து

# இயற்கை வேளாண்மைக்கு உதவிடும் கிடைமாடு தொழிலாளர்கள்

**திருமங்கலம், மார்ச் 30-**

வீடு வாசலை மறந்து நாடோடிகளாய் மாறி நாட்டின மாடுகளை பாதுகாத்திடும் கிடைமாடு தொழிலாளர்கள் இயற்கை வேளாண்மைக்கு பெரிதும் உதவி வருகின்றனர்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே உள்ள உச்சப்பட்டி, செட்டிகுளம், பெருமாள்பட்டி மற்றும் சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த ஏராளமானோர் மாடு மேய்ச்சலை தங்களது குல தொழிலாக செய்து வருகின்றனர். இவர்கள் தற்போது தங்களது கிடையில் மலை மாடுகள் உட்பட *750* முதல் *1000* மாடுகளை பராமரித்து கிடை மாடுகளாக பயன்படுத்தி வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதத்தில் தனித்தனியே புறப்படும் இந்த குழுவினர் தரிசு நிலம் மற்றும் தோட்டங்களில் மாடுகளை தங்க வைக்கின்றனர். இதற்காக நாள் ஒன்றுக்கு ஒரு மாட்டிற்கு தலா 5 ரூபாய் வீதம் கட்டணமாக பெறுகின்றனர். மாட்டுச் சாணம் பயிர் வளர்ச்சிக்கு உதவிடும் இயற்கை உரம் என்பதால் விவசாயிகள் இந்த கிடை மாடுகளை தங்களது தோட்டங்களில் நீண்ட நாட்கள் தங்கிடுவதை விரும்புகின்றனர். இந்நிலையில் மதுரை மாவட்டம் டி. கல்லுப்பட்டி பகுதியிலுள்ள தனியாரின் நிலத்தில் *500*க்கும் மேற்பட்ட கிடை மாடுகளுடன் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக முகாமிட்டுள்ள பெருமாள் என்பவர் கூறுகையில்:-

திருமங்கலம் உச்சப்பட்டி பகுதியை சேர்ந்த ஏராளமானோர் கிடை மாடு பராமரிப்பை குலத் தொழிலாக செய்து நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். அழிந்து வரும் அரிய வகை நாட்டு இன மாடுகள் உட்பட *16* வகை இந்த மாடுகளை மேய்ச்சலில் பராமரித்து வருகிறோம். நாங்கள் கிராமம் கிராமமாக சென்று வயல் வெளிகளில் மாடுகளை மேய்த்து, கிடை போடுவதை தொழிலாக செய்து வருகிறோம். குறிப்பாக செயற்கை உரங்களால் நிலத்தின் பாதிப்பை தவிர்க்கும் விவசாயிகளுக்கு மாட்டுச் சாணம் முக்கியமான ஒன்றாகும். மாட்டு சாணம் இயற்கை உரம் என்பதால் விவசாயிகள் தங்கள் நிலங்கள் மற்றும் தோட்டங்களில் கிடை போட விரும்புகின்றனர். இதனால் ஆண்டுக்கு ஓரிரு முறை மட்டுமே வீடுகளுக்கு செல்வதற்கான வாய்ப்பு கிடைப்பதால் செல்போன்கள் மூலம் குடும்பத்தினருடன் பேசிக் கொள்வோம். பொதுவாக அறுவடை காலம் முடிந்த பின் இயற்கை உரங்களை விரும்பும் விவசாயிகளை தேடி எங்களது கிடை மாடுகளுடன் மேய்ச்சலுக்கு புறப்பட்டு விடுவோம். மேய்ச்சலின் போது விவசாயிகள் பம்ப் செட் மூலம் மாடுகளுக்கு இலவசமாக தண்ணீர் தருவர்கள்.

பம்ப் செட், மற்றும் விவசாய கிணறு இல்லாத நிலங்களில் டிராக்டர் மூலம் கால் நடைகளுக்கு தண்ணீர் ஏற்பாடு செய்து கொள்வோம். தமிழக விவசாயிகளை விட கேரள விவசாயிகள் ஜாதி கிடை மாடுகளின் சாணங்களை பெறுவதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர். *50* கிலோ கொண்ட மாட்டுச் சாணத்தை ரூ.*200* ரூபாய் கொடுத்து அவர்கள் வாங்கு கின்றனர். இதன் மூலம் எங்களது வாழ்வினை வளப்படுத்திக் கொள்கிறோம் என்று தெரிவித்தார். நாடோடிகளாய் மாறி வீடு வாசலை மறந்து நாட்டின மாடுகளை இரவு பகலாக பாதுகாத்து இயற்கை வேளாண்மைக்கு பெரிதும் உதவிடும் கிடைமாடு தொழிலாளர்கள் போற்றுதலுக்கு உரியவர்களே.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

# போடிக்காமன்வாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஆண்டு விழா

**வத்தலகுண்டு, மார்ச் 30-**

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் போடிக்காமன் வாடி ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 66-வது ஆண்டு விழா நடைபெற்றது. முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நாகலட்சுமி சசிகுமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். தலைமை ஆசிரியர் ரமா மணி அனைவரையும் வரவேற்றார்.

முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நாகலட்சுமி சசிகுமார் சாதனை படைத்த அனைத்து மாணவ மாணவியர்கள் ஆசிரியர்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார் மாணவ மாணவிகளின் விழிப்புணர்வு நாடகங்கள் ஆடல் பாடல் மூலம் சிறப்பாக நடைபெற்றது இப்பள்ளிக்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் ஐ பெரியசாமி வழிகாட்டுதலின்படி இப்பள்ளிக்கு புதிய கூடுதல் வகுப்பு கட்டிடங்கள் பாதுகாக்கப்பட்ட புதிய ஆர்வோ குடிநீர் சிஸ்டம் புதிய டேபிள் சேர்கள் புதிய கழிப்பறை உள்பட பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது.



மேலும் வசதிகள் செய்து தரப்படும் என்று நாகலட்சுமி சசிகுமார் உறுதி அளித்தார். மாணவ மாணவியர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் மூலம் பல்வேறு விழிப்புணர்வுகளை அனைவருக்கும் எடுத்துக் கூறியது மிகவும் சிறப்பாக இருந்தது. தற்போது உள்ள சூழலில் தனியார் பள்ளிகளுக்கு மிஞ்சும் வகையில் அரசு பள்ளி இவ்வளவு சிறப்பாக நடைபெற்று வருகிறது என்று இப்பள்ளியின் ஆசிரியர் ஆசிரியர்களை பாராட்டி ஆசிரியர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கி அனைவரையும் பாராட்டினார்.

விழாவில் வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுனர் சிவகாமி தலைமை ஆசிரியர் ராமாமணி மற்றும் ஆசிரியர்கள் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டார்கள். விழாவின் முடிவில் பட்டதாரி கணித ஆசிரியர் டேவிட் கண்ட்ரி ஜார்ஜ் நன்றி கூறினார்.

## பொது அறிவிப்பு

**திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் நகர், கதவிலக்கம், 867/5, முத்து நகர் கூட்டுறவு நகரில் வசிக்கும் திரு. நல்லதம்பி அவர்களின் மனைவி திருமதி. ரூபா ஆகிய எனது கட்சிக்காரர் அறிவிக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால் எனது கட்சிக்காரர் கடந்த 2006 மற்றும் 2008 ம் ஆண்டு திண்டுக்கல்லை சேர்ந்த திரு. திருமலை (எ) ராமசாமி பிள்ளை மற்றும் அவர்களுடைய குடும்பத்திற்கு சொந்தமான திண்டுக்கல் பதிவு மாவட்டம், திண்டுக்கல் இணை 2, சார்பதிவு மாவட்டம் எல்கைக்கு உட்பட்ட திண்டுக்கல் மேற்கு தாலுகா, தாடிக்கொம்பு கிராமத்தில் புல எண். 403-ல் மேற்சொன்ன நபர்களிடமிருந்து எனது கட்சிக்காரர் கிரைய ஆவணங்கள் 2994/2006 மற்றும் 1588/2008 வாயிலாக விஸ்தீரணம் 16 ஏக்கர் 43 செண்டு அளவுள்ள நிலத்தினை கிரையம் பெற்று அவருடைய சுவாதீனத்தில் இருந்தபொழுது எனது கட்சிக்காரருக்கு எதிராக திண்டுக்கல்லை சேர்ந்த பாப்புபிள்ளை அவர்களின் மகள் செல்வி. வத்சலாதேவி திண்டுக்கல் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் மேற்சொன்ன சொத்தில் பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கு எண்.18/2009 தாக்கல் செய்தார் அந்த வழக்கில் அவருக்கு ஆதரவாக முதல்நிலை தீர்ப்பாணை வழங்கப்பட்டு அதற்கு எதிராக எனது கட்சிக்காரர் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் முதல் ஏற்பு வழக்கு எண். 23/2012 தாக்கல் செய்து அதில் இடைக்கால தடை உத்தரவும் பெற்றிருந்த சூழலில் மேற்சொன்ன A.S.No.23/2012 வழக்கானது ஆள் தோன்றா நிலையில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த நிலையில் மேற்சொன்ன செல்வி. வத்சலாதேவி முதலாவது கூடுதல் நீதிமன்றம் திண்டுக்கல்லில் I.ANo.274/2012 in O.S.No.18/2009 இறுதி தீர்ப்பாணை வழங்க வேண்டி தாக்கல் செய்த மனுவானது அவருக்கு ஆதரவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்நிலையில் எனது கட்சிக்காரர் ஆள்தோன்றா நிலையில் தள்ளுபடி செய்யப்பட்ட A.S.No.23/2012 வழக்கினை மீண்டும் கோப்பில் எடுக்க கோரி தாக்கல் செய்த மனுவை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை ஏற்றுக்கொண்டது. இந்நிலையில் இறுதி நிலை தீர்ப்பாணைக்கு எதிராக எனது கட்சிக்காரர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் A.S.No.107/2023 என்ற வழக்கினை தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. மேற்சொன்ன நிலுவையில் உள்ள அப்பீல் வழக்கினை சுட்டிக்காட்டி திண்டுக்கல் இணை சார்பதிவாளர் எண். 2 ல் ஆட்சேபனை மனு கொடுத்திருந்தார். அதையும் பொருட்படுத்தாமல் திண்டுக்கல் நகர், K.K.நகர் 7வது தெரு, கதவிலக்கம் 11/ B-ல் வசிக்கும் ராஜேந்திரன் மகன் R. ஹரிஸ்குமார் அவர்களுக்கு எனது கட்சிக்காரர் வாங்கி அனுபவத்தில் இருந்த விஸ்தீரணம் 16 ஏக்கர் 43 செண்டு நிலத்தில் 9 ஏக்கர் 80 செண்டு நிலத்தினை வழக்கில் எதிர்வாதியாக உள்ள செல்வி.வத்சலாதேவி அவர்கள் 23.01.2025 அன்று கிரைய பத்திரம் எண். 27 வாயிலாக மோசடியாக விற்பனை செய்துள்ள விபரத்தை அறிந்த எனது கட்சிக்காரர் அதிர்ச்சி அடைந்தார். எனது கட்சிக்காரர் வாங்கிய விஸ்தீரணம் 16 ஏக்கர் 43 செண்டு நிலத்தில் மேற்சொன்ன செல்வி. வத்சலாதேவி மோசடியான கிரைய பத்திரத்தின் வாயிலாக மேற்சொன்ன R.ஹரிஷ்குமார் அவர்களுக்கு விற்பனை செய்த விஸ்தீரணம் 9 ஏக்கர் 80 செண்டு நிலம் போக மீதமுள்ள 6 ஏக்கர் 83 செண்டினை யாரும் சட்டத்திற்கு புறம்பாக வாங்கினாலோ அல்லது வில்லங்கம் ஏற்படுத்த முயற்சித்தாலோ அது எனது கட்சிக்காரரை ஒருபோதும் கட்டுப்படுத்தாது என இந்த பொது அறிவிப்பின் வாயிலாக அறிவுறுத்தப்படுகிறது.**

**A.ரமேஷ், B.Sc, B.L., வழக்கறிஞர்,**
**மதுரை. அலைபேசி: 6380323979**

**IN THE COURT OF THE II ADDITONAL SUB JUDGE, MADURAI**
**I.A.No.01/2024 IN O.S.No. 1471/2015**

Between
**A.V.Sethuraman and others,**
**...Petitioner/Plaintiffs**

**AND:**
**1. A. S. Rajkumar**
S/o A. P. Sundara Gopalaiyar
No. 14, A.A.Manal Road,
Near T. K. TMahal,
Balarengapuram Madurai - 9.
**2. A. S. Perma**
D/o A. P. Sundara Gopalaiyar
19, Narasimmapuram 2nd cross street, Sourashtra High school opposite Kamarajar Salai,
Madurai 9.
**3.A.S.Rajeshwari**
D/ o A. P. Sundara Gopalaiyar
- do -
**4. A. S. Jeyanthi,**
D/o A. P. Sundara Gopalaiyar
- do -
**5. A. S. Malliga**
D/o A. P. Sundara Gopalaiyar
- do -
**6. Savithiri Ammal**
W/o Late, Ramamoorthy
Nagal 1st street, Dindigual.
**7. R. Krishna Rao**
S/o Ramachary
Nagal 1st street, Dindigual.
**8. C.V. Saithanya**
S/ o C. K. Vivekananthan
851, Khanpalayam 1st street,
Kamarajarpuram, Madurai 9.
**9.Tmt.Saraswathi**
W/o Late. Kirshna Roa,
Nagal 1st Street, Dindigal
**10.Tmt.Lakshmi**
D/o Late. Kirshna Roa, - do -
**11.Tmt.Padma**
D/o Late. Kirshna Roa, - do -
**12.K. Manikandan**
S/o Late. Kirshna Roa, - do-
**....Respondents/Defendants**

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் தங்கள் மேல் தொடர்ந்த வழக்கு I.A.No.1 of 2024 in O.S No. 1471 of 2015 -ல் எதிர்மனுதாரர் ஆகிய தாங்கள் ஆஜராவதற்காக வரும் 15.04.2025 அன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றைய தேதியில் தாங்கள் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ காலை 10 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டியது. தவறும்பட்சத்தில் மேற்படி வழக்கானது. தங்களுக்கு எதிராக ஒருதலை பட்சமாக ஆக்கப்பட்டு தீர்மானிக்கப்படும் என்பது சட்டப்படி இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மதுரை **N.S.KARTHIKEYAN M.L.,**
29.03.2025 **Advocate, Madurai.**

